Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR
Case No. CC. 219 /2025
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. மாயாண்டி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. காளி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | தாயலூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 50 |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 07th day of November 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை–**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் சித்தப்பா மகன் ஆவார். 30.01.2025 அன்று இரவு ஆஜர் எதிரி என் வீட்டிற்கு வந்து என் மனைவியின் கையை பிடித்து இழுத்தார். ஏன் இவ்வாறு செய்கீறிர் என்று எதிரியை கேட்டதற்கு நான் தான் கையை பிடித்து இழுத்தேன் உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள் என்று கூறினார். பின்பு மறுநாள் மாலை 4.30 மணிக்கு நான் பால் ஊற்றுவதற்காக தாயலூர் பால் சொசஷ்டிக்கு சென்ற போது ஆஜர் எதிரி என்னை பார்த்து சட்டையை பிடித்து கீழு தள்ளி விறகு கட்டையால் என் தலையை தாக்கி உடைத்து விட்டார். பின்பு நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். பின்பு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். நான் மருத்துவமனையில் சிகிச்சயையில் இருந்தே போது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமுலத்தில்

உள்ள கையொப்பம் என்னுடையதுதான் (அந்த புகார் வாக்குமூலம் அ.சா. ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

| | |
|---|---|
| Signature of Witness | Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |